# சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
# பாவமே செய்யாதவர் யார்?

---

காசி ஷேத்ரம்! குளிர் காலம் வேறு. அந்தக் குழிக்குள் இருந்து அக்கிழவி ஓயாமல் கத்திக் கொண்டே இருக்கிறாள் கடந்த அரை மணி நேரமாய். அவளிருக்கும் குழியைச் சுற்றிக் கூட்டமோ கூட்டமே தவிர யாரும் எதையும் செய்வதாக இல்லை.

அதோ...குழிக்குள் கிழவியின் வயதான கணவன். எத்தனை வயது என்று அவருக்கே தெரியுமோ தெரியாதோ? காசி... காசி... என்று காசிக்கு எங்கோ இருந்து வந்து சேர்ந்தனர். அவர்களை வினை விட்டதா?

கங்கையில் குளிக்கப் படி இறங்கிய கணவன் சேறு வழுக்கிக் குளிக்குள் விழுந்து கிடக்கிறார். தூக்கிவிடவா ஆள் இல்லை? லட்சக்கணக்கில் ஜனங்கள் இருக்க ஏன் யாரும் உதவ முன்வரவில்லை?

என்ன செய்வது யார் உதவப் போனாலும் அந்தக் கிழவி போடும் கூச்சலும் ஆர்ப்பாட்டமும் காது கொடுத்துக் கேட்க முடியுமா? அதான் எல்லோரும் அவள் புலம்புவதையே பார்க்கிறார்கள்.

இதற்கிடையில் கூட்டத்தில் ஓடி வருகிறான் அவன். வளர்ந்து, ஸ்திடகாத்ரமாய் இருக்கும் வாலிபன் ஒருவன். முறுக்கிய மீசை, இடுப்பில் மறைக்கப்பட்ட கத்தி. எதற்கும் அஞ்சாத பழிபாதகன். காசி மாநகரில் வாழும் பக்காத்திருடர்களில் ஒருவன். காசி மஹாராஜா அரண்மனைக்குள் சென்று களவாட முயன்றவன் என்றால் இவன் சாமார்த்தியம் தான் என்னே? அவன் பெயர் ரஞ்சன்.

அவனைப் பற்றித் தெரிந்த காசி நகர மக்கள் ஜாக்ரதையாய் இருப்பர். கையில் கிடைத்ததை அள்ளும் கள்ளன் இவன்.

அவன் எதையோ திருடிவிட்டு அப்போது தான் சமார்த்தியமாக கூட்டத்துக்குள் நுழைகின்றான். குளிக்குள் பார்க்கிறான், செய்தி அறிகிறான், குளிக்கு அருகில் செல்கிறான், கிழவி கூப்பாடு போடுகிறாள்,

"ஐயோ! ஐயோ! என் மாங்கல்ய பலம் போகிறதே! அடேய் அவரைத் தொடாதே!"

கள்ளனுக்கோ கோபம், "பாட்டி! என்ன உதவ வந்தால் இப்படிப் பேசுகிறாயே?"

கிழவி," அடேய்! அப்பா! இவரை யாருமே தூக்க முடியாது! நாங்கள் இங்கேயே சமாதி ஆக வேண்டியது தான்!" என்று அழுகிறாள்.

"அப்படி என்றால் யார் தான் இவரைத் தூக்குவதாம்?!" என்று யாரோ கேட்க,

"***அப்படிக் கேளுங்கள், யார் பாவமே செய்யாமல் வாழ்கிறார்களோ அவர்கள் தொட்டால் தான் இவர் உயிருடன் இருப்பார், இல்லை என்றால் உடனே இறப்பார், அப்படி யார் இருக்கிறார்கள்?"*** என்று கிழவி புலம்ப,

"பாவமே செய்யாதவர்களா? என்ன கூத்து இது? நம்மால் ஆகாத காரியம்" என்று பலர் முகம் சுளித்தபடி கழன்றனர்.

கள்ளன் கேட்டான், "பாவமே செய்யாதவன் தூக்கினால் அவசியம் பிழைப்பாரா?"

கிழவி, "உண்மை! உண்மை! அந்த அன்னபூரணி மீது சத்யம்! அப்படிப் பட்டவர்கள் யாரையாவது கூட்டி வாப்பா!"

"இதோ வருகிறேன்..." என்று ஓடியவன் ஒரே தாவில் கங்கைக்குள் குதித்து மூன்று முறை முழுக்குப் போட்டான்,

"***தாயே! கங்கை மாதாவே! உன்னுள் குளித்தால் எல்லாப் பாவங்களும் கழியும் என்ற நம்பிக்கையில் தானே காலம் காலமாய் பாரத மக்கள் இங்கே வருகிறார்கள்? நான் எனக்குத் தெரிந்து எந்த புண்ணியமும் செய்யவில்லை! ஆனால் உன்னை நம்புகிறேன், இது வரை செய்த பாவங்கள் இதோ உன்னால் கரைந்தன, உன்னை நம்பி அக்கிழவரைத் தூக்கப் போகிறேன்!***" என்று திரும்பி வந்து கிழவரைத் தூக்கி விட்டான். இருவரும் அவனை ஆசீர்வதித்து விட்டு மக்களைப் பார்த்துச் சொன்னார்கள்;

"***மக்களே! நம்பிக்கை தான் வாழ்க்கை. இதோ இந்தக் கள்வனுக்கு இருக்கும் கங்கை மீதான நம்பிக்கை உங்களுக்கு இல்லையே! ஏன் இங்குள்ள வேத வித்வான்கள் அர்ச்சகர்கள் என யாருக்குமே இல்லையே? குருட்டுத் தனமான பக்தியையும் சடங்குகளையும் தானே செய்கிறீர்கள்? இனியாவது மாறுங்கள்! மஹா திருடனான இவன் கங்கை தான் செய்த பாவங்களைப் போக்கியது என்று பரிபூர்ணமாக நம்பினான், காரணம், உயிர்த்துடிக்கும் ஜீவனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் தான், இந்த எண்ணமே நாம் செய்த பாவவினைகளை மாற்றுமே! சரி சரி செல்லுங்கள், உண்மையான நம்பிக்கையுடன் கங்கையில் குளியுங்கள்***!" என்று வயோதிகத் தம்பதிகள் நகர்ந்தனர்.

இவர்களின் வாக்கு கள்ளனை சிந்திக்க வைத்தது, தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்தான், எதிர்கால வினைப் பலன்களையும் பார்த்தான், மனதில் தெளிவு ஏற்பட, புதிய மனிதனாய் ஊருக்குள் உழைக்கச் சென்றான்.காலம் சென்றது...

அன்று தீபாவளி! காசியே சிவலோகமாய்க் காட்சி அளிக்கிறது. கள்வன் இன்று வெற்றிலை வியாபாரியாகி நேர்மையாக வாழ்கிறான். அன்று அன்னபூரணியை லட்டுத்தேரில் ஏற்றி எழுந்தருளச் செய்வர். அதற்கு அவன் தன் சுய உழைப்பால் தன்னால் முடிந்த பணத்தை அளித்து உத்சவத்தில் கலந்து கொண்டான். இரவில் வெகு கோலாஹலமாய் காசிவிஸ்வநாதருக்கு சப்த ரிஷி பூஜை நிகழ்கிறது. இவனும் கலந்து கொள்கிறான். அதோ அங்கே அந்த வயோதிகத் தம்பதியினர்...அவர்களை நோக்கி நன்றியுடன் இவன் முன்னேற அவர்கள் இவனைப் பார்த்துச் சிரித்தபடியே கூட்டத்தில் மறைய, இவனோ தவிக்க, இதோ கடைசி தீபாராதனை! தனக்கு உண்மையைச் சொல்லி வினையை அகற்றிய விஸ்வநாதனை மானசீகமாய்க் கைகூப்பி வணங்க அவன் கண்களுக்கு அந்த ஜ்யோதிர்லிங்கத்துள் வயோதிகத் தம்பதியினர் காட்சி தந்தனர் சிவசக்தியாய்!

ஓம் நம சிவாய!